போல, பல இடங்களிலே அந்த சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, தொழிலாளிகளை வைத்து இருக்கிற போதுகூட, தொழிலாளிகளுக்கு உரிய சம்பளம் கொடுக்கப்படுகிறதா தனியார் துறையிலே என்பது எல்லாம் ஆய்வுக்குரிய ஒன்றாகத்தான் இருக்கிறது. எனவே, எல்லோரும் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற முயற்சி எடுக்கிறபோது, நிச்சயமாக ஓரளவுக்கு அது சாதகமாக வந்து அமையும் என்று கருதுகிறேன். ஆனால் இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்று நினைத்தாலும், பொருளாதாரச் சூழ்நிலையிலே அதை அதிகப்படுத்துவது என்பது சிக்கலாகத்தான் இருக்கும். அதோடு, விபத்திலே உள்ளாகி இறந்து விடக்கூடியவர்கள், யார் இறக்கிறார்களோ, அவர்கள் மீது தவறு இருந்தாலும்கூட, அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது. எனவே, அதிகமாகப் போவது கூட, அதிகமாக விபத்துக்களுக்கு வழி வகுத்து விடுமோ என்ற ஒரு எண்ணம் கூட ஏற்படுகிறது. எனவே, இரண்டு பக்கமும் சீர்தூக்கிப் பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கன்னியாகுமரி-சென்னை சிறிய விமான போக்குவரத்து.

452—(* வினா எண் 13170) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி-சென்னை சிறிய விமான போக்குவரத்து அமைப்பது பற்றி செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய விமானங்கள் இறங்குவதற்கு வசதியில்லாத நகரப் பகுதிகளில் சிறிய விமானப் போக்குவரத்து இப்போது பிரபலம் அடைந்து வருகிறது. எனவே, இவைகளை முன்னுதாரணமாகக் கொண்டு கன்னியாகுமரி உலக சுற்றுலா மையமாக வளர்ந்து வரும் நிலையில் உள்ளது என்பதை

1987 ஏப்ரல் 22]

அனைவரும் அறிவார்கள். எனவே, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கக்கூடியவர்கள், பல பகுதி மக்கள் மட்டு மல்லாமல், உலகத்திலுள்ள எல்லா நாடுகளைச சேர்ந்தவர்களும் அங்கு வந்து செல்கிறார்கள். அவர்கள் வந்து செல்வதற்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் முறையிலே, இயற்கையாக முக்கடலும் சங்கமமாகும் இயற்கைச் சூழ்நிலையை அடக்கிய, இந்தியாவினுடைய தென் கோடி முனையிலே இருக்கக்கூடிய கன்னியாகுமரி முனைக்கு, தமிழ்நாட்டில் தலைநகரமாக உள்ள சென்னையிலிருந்து விமானப் போக்குவரத்து—சிறிய விமானப் போக்குவரத்து—அமைக்கவும், சிறிய விமான தளம் அமைக்கவும், அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தூத்துக்குடிககு அருகாமையிலே புதிதாக ஒரு விமான தளம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படி அமைக்கிறபோது, கன்னியாகுமரிக்கும், தூத்துக்குடிக்கும் 70 அல்லது 75 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கும். எனவே, அந்த வசதி போதும் என்று நாம் நினைத்தாலும், எதிர்காலத்தில் எல்லா மாவட்டத் தலைநகரங்களுக்கும் இந்த சிறிய விமானங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நாம் கேட்கலாம். ஆனால் மத்திய அரசாங்கத்திற்கு, இது நடை முறையில் சாத்தியமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. காரணம், இப்போது சேலம், தூத்துக்குடி இதுபோன்ற இடங் களுக்கு நாம் கேட்கிறபோதே கூட, அவர்கள் கொஞ்சம் இதற்கு செலவழிப்பதற்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன என்று தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய ஆசை எல்லா இடங்களுக்கும் விமானப் போக்குவரத்து வசதி கொடுக்கப்படவேண்டும் என்பது தான். அதிலே வலியுறுத்து வதிலே பிரச்சினை இல்லை. ஆனால் நடைமுறையில் எப்படி இருக்கும் என்று தெரியவில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாயுதூத் என்று சொல்லி, தனியார் கம்பெனிகளோடு ஒரு உடன்பாட்டைச் செய்து கன்னியாகுமரிக்கு விமானப் போக்குவரத்து அமைக்க இயலுமா என்பதோடு,

விமானப் போக்குவரத்துக் கழகம் என்று சொல்லக்கூடிய ஒரு புதிய அமைப்பை உருவாக்கி அதன் மூலமாக நகரப் பகுதிகளுக்கு அந்த வாய்ப்பை உருவாக்கித் தாமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்தைப் பொறுத்தவரை, எதைச் செய்தாலும் மத்திய அரசாங்கம்தான் செய்யவேண்டியிருக்கிறது. ஏற்கனவே அதற்கான அமைப்பு இருக்கிறது. புதிய அமைப்பு தேவையில்லை. எல்லா இடத்திற்கும் விமானப் போக்குவரத்து கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கம் நினைத்தால் கொடுக்கலாம். ஆனால் நிதிநிலைமை அதை அனுமதிக்குமா என்பதை அங்கேதான் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். எனவேதான், அந்தக் காரணத்தால்தான் நான் சொன்னேன்—நமக்கு ஆசை இருந்தாலும் அவர்களுக்கு நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக எனக்குத் தெரிகிறது என்று சொன்னேன்.

சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகம்.

453—(வினா எண் 3902) திரு. சா. ஜெயச்சந்திரன்:* மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் நந்தனார் கல்விக்கழகம், நந்தனார் மடம் என்ற பெயரால் அதன் பொறுப்பில் உள்ளவர்கள் சில ஆண்டுகளில் மட்டும் (1975-க்கு முன்) ரூ. 1.00 லட்சத்திற்கு மேல் கையாடல் செய்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகம் என்ற பெயரில் சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் 1923 ஆம் ஆண்டு காலஞ்சென்ற திரு. சகஜானந்தா அவர்களால் அந்தச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. சங்கத்தின் நோக்கம் ஆதிதிராவிட மக்களுக்கு கல்வி புகட்ட வேண்டும், வாழ்க்கை